**செய்தி வெளியீடு எண் : 107/2021** **நாள் : 05.05.2021**

**காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 250 படுக்கைகளுடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.18 கோடி மதிப்பில் 250 படுக்கை வசதியுடன் கட்டப்பட்டு வரும் புதிய கட்டிடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது,

புதிய கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள 250 படுக்கைகளுக்கும் ஆக்ஸிஜன் வசதி செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கொரோனா நோய் கட்டுப்படுத்த காய்ச்சல் முகாம், தடுப்பூசி முகாம்கள் அமைக்கப்பட்டு முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது. மக்கள் தொகை அதிகம் கொண்ட குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் பகுதிகளில் கூடுதல் முகாம்கள் அமைக்கப்பட்டு, பரிசோதனை நடைபெற்று வருகிறது. மேலும் பொதுமக்கள் முகக் கவசம் கட்டாயம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். கைகளை நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

அத்தியாவசிய பணிகள் தவிர, மற்றவைகளுக்கு வீடுகளை விட்டு வெளியே வருவதை பொதுமக்கள் தவிர்க்கவும். வணிக வளாகங்கள், கடைகள் கொரோனா தடுப்பு விதிகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3025 கொரோனா நோயாளிகள் கண்டறியப்பட்டு உள்ளனர். இதில் 1558 பேர் குணமடைந்துள்ளனர். தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் 613 ஆக்ஸிஜன் படுக்கைகள் உள்ளது. இதுவரை 466 நபர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மீதம் 147 ஆக்ஸிஜன் படுக்கைகள் காலியாக உள்ளது.

காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் 375 படுக்கைகள் உள்ளன. இதில் 250 படுக்கைகள் ஆக்ஸிஜன் வசதி உள்ளது தற்போது இன்னும் 50 ஆக்ஸிஜன் படுக்கைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.ஜீவா, மருத்துவ அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**